Approved by the Text-Book Committee.

GEMS

OF

TAMIL POETRY

BOOK I

EDITED WITH
INTRODUCTION AND NOTES

BY

M. S. THIRUNAVUKKARASU MUDALIAR,
LECTURER IN TAMIL, PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

SECOND EDITION

K. PALANIANDI PILLAI & CO.,
PUBLISHERS,
Triplicane, Madras S. E.

All Rights Rese As. 6.

T016545
Sarasvati Mahal Library. Thanjavur

பாமணிக் கோவை

முதற் பாகம்

சென்னை, பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியர்
மணி. திருநாவுக்கரசு முதலியார்
தொகுத்தது.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

KALYANA... BOOKS

பதிப்புரிமை] [அணா 6

PRINTED AT
THE B. N. PRESS,
MOUNT ROAD, MADRAS.

பாயிரம்

பாமணிக்கோவையின் முதற்பாகமாகிய இது தமிழுலகத்தில் தலை நீட்டுகிறது. செந்தமிழ்ச் சுவை எவ்வாற்றானும் உண்டாக வேண்டு மென்னுங் கருத்தான் இது தொகுக்கப்பட்டது என்பது இதனை ஒரு முறை நோக்குவார்க்கும் புலனாகும். இதன்கண் மாணக்கர்க்கு அபிருசியை விளைவிக்கக் கூடிய செய்யுட்கள் ஆராய்ந்து சேர்க்கப்பட்டுள்ளன. நூல்களில் இருந்து திரட்டப்பட்ட பாட்டுக்கள் கருத்துவகையானும் சொல் நயத்தானும் சிறந்தனவாதலின், இதனைக் கற்பிக்கும் தமிழ்ப்புலவர் ஆங்காங்கு விரித்துச் சொல்லுவதற்கு மிக்க இடம் பெறுவர்; மாணவருக்குப் பொது அறிவைப் பெருக்குவதற்கு இது சிறந்த கருவியாகும். இதன் இரண்டு மூன்றாம் பாகங்களைக் கடைக்கணித்த நந்தம் தமிழ் மக்கள் இதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென இறைவனுடைய அழகிய அருளை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

மணி. திருநாவுக்கரசன்.

உள்ளுறை

I. கடவுள் வாழ்த்து 20		பக்கம்
1. விநாயகர்	....	1
2. சிவபெருமான்	....	1
3. முருகர்	....	2
4. திருமால்	....	3
5. கலைமகள்	....	4
6. திரு அங்கமாலை	....	6
II. நீதி		
1. நீதி வெண்பா	....	8
2. நன்னெறி 10	....	9
3. முதுமொழிக் காஞ்சி	....	11
4. இனியவை நாற்பது	....	14
5. இன்னா நாற்பது	....	15
6. தண்டலையார் சதகம்	....	16
7. சாணக்கிய நீதி 12	....	18
8. குமரேச சதகம் 7	....	21
III. இனிய பகுதிகள் 13		
1. கம்பர் நஞ்சை மாற்றியது	....	26
2. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்	....	27
3. பட்டினத்தார் புலம்பல்	....	28
4. கூத்தரும் அம்பட்டனும்	....	28

பக்கம்

5. கூத்தரும் குயவனும் 29
6. காளமேகப் புலவரும் அதிமதுர கவிராயரும் 29

IV. தனிப்பாடல்கள்

1. பச்சையப்பன் அறம் 30
2. பெற்ேறார் வணக்கம் 32
3. பலபொருள் பற்றியவை ... 33
4. சிவஞான முனிவர் 38

V. பன்னெறி 17

1. தாலாட்டு 39
2. முருகவேள் 40
3. இராமபிரான் 41
4. கல்வி 42
5. கொலையும் புலையும் 42
6. அரியது 42

VI. காதை 40

1. கதை வரலாறு 43
2. சிங்கமும் முயலும் 47
3. முயலும் பூனையும் 48
4. கோநாயும் ஆட்டுக்குட்டியும் ... 50

VII. தமிழ் நாடு 51
VIII. குறிப்புரை 54

பாமணிக் கோவை

I. கடவுள் வாழ்த்து

1. விநாயகர்

பின்வரும் பாட்டு நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியவரால் பாடப்பட்டது. நம்பி திருநாரையூரில் பிறந்தவர்; சைவர்; பிராமணர்; வேதம், வேதாங்கம் முதலியவற்றை நன்றாகக் கற்றவர்; தேவாரம், திருவாசகம் முதலிய சைவநூல்களைப் பதினொரு திருமுறைக ளாக வகுத்தவர்; சிவனடியவரிடத்து மிக்க அன்பு பூண்டவர்; தமிழிலே பல நூல்களைச் செய்தவர்; பதினொன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவர் :

• திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. (1)

திருவிரட்டைமணிமாலை.

---

2. சிவபெருமான்

பின்வரும் பாடல் ஐயன் ஆரிதர் என்பவரால் செய்யப்பட்டது. இவர் சேரர் என்னும் அரசகுலத்திற் பிறந்தவர்; சைவர்; இவருடைய பாட்டுக்கள் இனிமை மிகுந்தவை :

கண்ணவனைக் காண்கவிரு காதவனைக் கேட்கவாய்
பண்ணவனைப் பாட பதஞ்சூழ்க—எண்ணிறைந்த
நெய்யொத்து நின்றானை நீலமிடற் றானையென்
கையொத்து நேர்கூப்பு க. (2)

புறப்பொருள் வெண்பா மாலை.

இஃது **அதிவீரராமபாண்டியர்** பாடியது. அதிவீரராமர் திரு நெல்வேலியின் தென்கரையிலுள்ள கொற்கைநகரை அரசிருக்கை யாகக் கொண்டு அரசுபுரிந்தவர்; குலம் பாண்டிய மன்னர் குலம்; சமயம் சைவம்; இவருக்குப் பிள்ளைப்பாண்டியன் என்றும், தமிழ் வளர்த்த தென்னவன் என்றும் பெயர்கள் உண்டு. இவரே நைடதம் இயற்றிய நற்பெரும் புலவர். இவர் காலம் ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன்னாகும்:

சிந்தனை உனக்குத் தந்தேன்,
திருவருள் எனக்குத் தந்தாய் ;
வந்தனை உனக்குத் தந்தேன்,
மலரடி எனக்குத் தந்தாய் ;
பைந்துணர் உனக்குத் தந்தேன்,
பரகதி எனக்குத் தந்தாய் ;
கந்தனைப் பயந்த நாதா,
கருவையில் வாழுந் தேவே. (3)

---

3. முருகர்

இவை **சிதம்பரசுவாமிகள்** அருளிச்செய்தவை. இவர் மதுரை யிலே பிறந்தவர்; குமாரதேவருக்கு மாணாக்கர்; முருகரிடத்திலே பேரன்பு உடையவர்; இவர் பாட்டுக்கள் இனிப்பாகவும் இலேசாக வும் இருக்கும்; இவர் ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டு களுக்குமுன் இருந்தவர்; திருப்போரூரைப் புதுக்கியவர்:

நாயே னுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயே னிழைத்த பெரும்பிழையை —நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா, என்னை
வெறுத்தா லெனக்கார் உறவு. (4)

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே,—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே, நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு. (5)

ஆணிப்பொன் என்கோ! அருளாழி தானென்கோ!
மாணிக்க மென்கோ! மதியென்கோ!—பேணிப்
பணிவார் இருள்போக்கும் பானுவென்கோ! போரூர்க்கு
அணியாகுந் தெய்வத்தை யான். (6)

குழவி அழுதகுரல் கேட்டதாய் வந்து
அழுதகண்ணீர் மாற்றிஅமு தூட்டுங்—கெழுதகைபோல்
நாயேன் இடர்களைந்து நல்லருளுட் டும்போரூர்ச்
சேயேநம் தாயாகுந் தேர். (7)

திருப்போரூர்ச் சந்நிதி முறை.

---

4. திருமால்

இது திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்தது. இவர் வேளாளர்; வைஷ்ணவ சமயத்தவர்; கலியர், பரகாலர் என்னும் வேறு பெயர்களையும் உடையவர்; இவருடைய காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்பர்.

குலந்தருஞ் செல்வந் தந்திடும்
அடியார் படுதுய ராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (8)

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்.

இது நளவெண்பாவிலுள்ளது ; இதனைப் பாடியவர் புகழேந்திப்புலவர் ; இவர் குலம் : வேளாளகுலம் ; சமயம் : வைஷ்ணவம் ; காலம் : ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஆகும் :

ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவர்க்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே எனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை. (9)

நளவெண்பா.

---

5. கலைமகள்

இது பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடியது. இவர் ஊர் : செல்லி நகர் ; குலம் : வேதியர்குலம் ; சமயம் : சைவம் ; காலம் ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முன் :

ஆடகன்னா நின்றுறையும் அன்னமே, நின்னுடைய
பாடகமுஞ் சீறடியும் பற்றினேன்—தேடரிய

அற்புதமே, அம்மே, அணங்கே, மணநாறுங்
கற்பகமே, நாயேனைக் கா. (10)

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.

இவை கம்பர் பாடியதாக வழங்கும் சரஸ்வதியந்தாதியில் உள்ள பாடல்கள். கம்பர் மிகப் பெரிய தமிழ்ப்புலவர்; இவர் பாடிய இராமாயணம் அரிய நூல்; பெரிய காவியம். கம்பர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள தேரழுந்தூர் என வழங்கும் திருவழுந்தூரில் உவச்சர் குலத்திலே பிறந்தவர்; சமயம் சைவமென்று சிலரும், வைணவம் என்று சிலரும் கூறுவர்; காலம் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்:

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். (11)

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி. (12)

பின்வரும் பாட்டுக்கள் வேதநாயகம் பிள்ளை பாடியன. இவர் வேளாண் குளத்தூரிலே முப்பது ஆண்டுகட்கு முன் இருந்தவர்; ஜில்லா முனிசீப்பு உத்தியோகம் செய்தவர்; கத்தோலிக் கிறிஸ்தவர்; மஹாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கர். பிரதாப முதலியார் சரித்திரம் இவர் எழுதியது.

விலகரும் அருளின் மிக்கூர்
விமலனை வாழ்த்த வேண்டின்
அலகில் கற்பங் களேகம்
ஆயுளாய் மும்மைத் தாய
உலகமோர் உடம்பாய் அந்த
உடம்பெலாம் வாயாய் நித்தம்
பலகவி மாலை சூட்டிப்
பரவினும் முடியுங் கொல்லோ? (13)

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான் ; புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதிசெயும்; தருக்க ளெல்லாம்
பொதிஅலர் தூவிப் போற்றும் ;
பூதம்தம் தொழில்செய் தேத்தும் ;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும் ;
அகமேநீ வாழ்த்தா தென்னே ! (14)

---

6. திரு அங்கமாலை

இஃது ஒவ்வொரு அங்கத்தையும் நோக்கிக் கூறி இருப்பதால் அங்கமாலை என்று பெயர் பெற்றது (அங்கம்—உறுப்பு). இது திருநாவுக்கரசு நாயனர் அருளியது. இவர் திருவாமூரில் வேளாளர் குலத்தில் அவதரித்தவர். இவர் சிவஸ்தலங்கள்தோறும் சென்று சிவ பெருமான்மீது பதிகங்கள் பாடும் தொண்டு பூண்டொழுகியவர்.

இவர் அருளிச் செய்த திருப்பாடல்களுக்குத் தேவாரம் என்றும், தமிழ்வேதம் என்றும் பெயர். இவர் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்குமுன் இருந்தவர்:

தலையே நீ வணங்காய்-தலை
மாலை தலைக்க ணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். (15)

கண்காள் காண்மின் களோ-கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்தன்னைக்
கண்காள் காண்மின் களோ. (16)

செவிகாள் கேண்மின் களோ-சிவன்
எம் இறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின் களோ. (17)

வாயே வாழ்த்து கண்டாய்-மத
யானை உரிபோர்த் துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய். (18)

நெஞ்சே நீ நினையாய்-நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய். (19)

கைகாள் கூப்பித் தொழீர்-கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர். (20)

XII. நீதி

---

1. நீதிவெண்பா

நீதிவெண்பா நூலாசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை. இது 'நீதிசாகரம்' என்னும் வடமொழி நூலைப் பெரிதும் ஒத்திருக்கிறது. இவ்வாசிரியர் சிறிது காலத்துக்கு முன்னர் இருந்தவராதல் வேண்டும்.

அறிவன் பகையெனும் அன்புசேர் நட்பாம்
சிறுவன் பகையாம் செறிந்த—அறிவுடைய
வென்றி வனசரன்தான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேங்கைக் குரங்கு. (1)

கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணும்விழி ஏழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்கு
அநந்தம் விழியென் றறி. (2)

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர் துயரம் போல். (3)

ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்கு
அங்கமுழு தும்விடமே ஆம். (4)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (5)

தன்னை அளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி அரசன் பெருந்தேவி—தன்மனையைப்
பெற்றாள் இவரைவர் பேசில் எவருக்கும்
நற்றாயர் என்றே நவில். (6)

பாலின்நீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலின்நெறி
உற்றார் இடுக்கண் உயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து. (7)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறியல் ஆகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையால் அன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (8)

உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வார் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து. (9)

2. நன்னெறி

இது சிவப்பிரகாச சுவாமிகள் பாடியது. இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்; துறைமங்கலத்திலே வசித்தவர்; குலம்: சங்கம குலம்; சமயம்: வீரசைவம்; காலம் இருநூறு ஆண்டுகளுக்கு முன்:

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (10)

நீக்கம் அறம்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். (11)

ஊள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடம்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (12)

வருந்தும் உயிர்ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளல் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. (13)

தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல். (14)

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (15)

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. (16)

உண்டு குணம்இங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. (17)

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்து
ஆயினும் ஆமோ அறை. (18)

கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளம் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. (19)

---

3. முதுமொழிக்காஞ்சி

முதுமொழிக்காஞ்சி என்பது கடைச்சங்கத்து நூல். இதனை இயற்றியவர் கூடலூர்கிழார் என்பவர். காலம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன். இதில் வரும் நீதிகள் மிகச் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாட்டிலும் கருத்து ஆழ்ந்திருக்கிறது.

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை.
மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.
வண்மையிற் சிறந்தன்று வாய்மை உடைமை.

இளமையிற் சிறந்தன்று மெய்பிணி இன்மை.
கற்றலிற் கற்றுரை வழிபடுதல் சிறந்தன்று.
முன்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று. (25)

பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப.
ஈரம் உடைமை ஈகையின் அறிப.
சோரா நல்நட் புதவியின் அறிப.
சொல்சோர் வுடைமையின் எச்சோர்வும் அறிப. (29)

பெருமை உடையதன் அருமை பழியார்.
அருமை உடையதன் பெருமை பழியார்.
செயத்தக்க நல்கேளிர் செய்யாமை பழியார்.
அறியாத் தேசத் தாசாரம் பழியார்.
வறியோன் வள்ளியன் அன்மை பழியார்.
சிறியோர் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார். (35)

பழியோர் செல்வம் வறுமையின் துவ்வாது.
நாண்இல் வாழ்க்கை பசித்தலின் துவ்வாது.
பொய்வே ளாண்மை புலைமையின் துவ்வாது.
கொண்டு கண்மாறல் கொடுமையின் துவ்வாது.
அறிவிலி துணைப்பாடு தனிமையின் துவ்வாது. (40)

ஈரம்இல் லாதது கிளைநட் பன்று.
நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்.
நேராமல் கற்றது கல்வி அன்று.
மறுபிறப் பறியா ததுமூப் பன்று. (44)

ஒப்புர வறிதலின் தகுவர வில்லை.
இயைவது கரத்தலின் கொடுமை இல்லை.
உணர்விலன் ஆதலின் சாக்கா டில்லை.

நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.
இசையிற் பெரியதோர் எச்சம் இல்லை.
இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.
இரப்போர்க் கீதலின் எய்தும் சிறப்பில்லை. (51)

பேர்அறிவி னேன்இனிது வாழாமை பொய்.
காலம் அறியாதோன் கையுறல் பொய்.
மேல்வர வறியாதோன் தற்காத்தல் பொய்.
உறுவினை காய்வோன் உயர்வுவேண்டல் பொய்.
சிறுமைநோ னாதோன் பெருமைவேண்டல் பொய்.
பொருள்நசை வேட்கையோன் முறைசெயல் பொய்.

ஈரம் வெய்யோர்க்கு நசைகொடை எளிது.
குறளை வெய்யோர்க்கு மறைவிரி எளிது.
துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது.
இன்பம் வெய்யோர்க்குத் துன்பம் எளிது.
உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது.
பாரம் வெய்யோர்க்குப் பாத்தூண் எளிது. (63)

ஓங்கல் வேண்டுவோன் உயர்மொழி தண்டான்.
கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்
நிற்றல் வேண்டுவோன் தவஞ்செயல் தண்டான்.
வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.
மிகுதி வேண்டுவோன் வருத்தம் தண்டான்.
ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான். (69)

4. இனியவை நாற்பது

இந்நூற்கு ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார். இஃது இனிய பொருள்களை உரைக்கும் நாற்பது வெண்பாக்களை உடைய நூல். இவர் காலம் கடைச்சங்க காலம்.

ஏவது மாறா இளங்கிளைமை முன்னினிதே
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே
ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே
தேரிற்கோள் நட்புத் திசைக்கு. (70)

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிகள் அல்லாதார் மாண்புடையார்ச் சேருந்
திருவுந்தீர் வின்றேல் இனிது. (71)

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே
தானம் அழியாமை தான் அடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. (72)

கற்றார்முற் கல்வி யுரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது. (73)

நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதல் இனிது. (74)

வெல்லது வேண்டி வெகுளாதன் நோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறைஇனிதே
இல்லது காமுற் றிரங்கி இடர்ப்படார்
செய்வது செய்தல் இனிது. (75)

தானங் கொடுப்பான் தகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
ஊனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோடல் இனிது. (76)

ஆற்றுனை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
ஆக்கம் அழியினும் அல்லவை கூறுத
தேர்ச்சியின் தேர்வினிய தில். (77)

---

5. இன்னா நாற்பது

இது கபிலர் இயற்றிய நூல். இதில் இன்னாத பொருள்கள் நாற்பது வெண்பாக்களில் கூறப்பட்டிருக்கின்றன ; சங்ககாலம்.

ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா
நாற்றம் இலாத மலரின் அழகின்னா
தோற்றம் இலாதான் துணியின்னா ஆங்கின்னா
மாற்றம் அளியான் உரை. (78)

பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னா
நகைஆய நண்பினர் நார்இன்மை இன்னா
இகலின் எழுந்தவர் ஓட்டின்னா இன்னா
நயம்இல் மனத்தவர் நட்பு. (79)

பொருள்உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னு
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப் போக்கின்னு
அருளிலார் தம்கண் செலவின்னு இன்னு
பொருள் இல்லார் வண்மை புரிவு. (80)

உண்ணுது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னு
நண்ணுப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னு
கண்ணில் ஒருவன் வனப்பின்னு ஆங்கின்னு
எண்இலான் செய்யும் கணக்கு. (81)

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னு
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னு
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னு ஆங்கின்னு
ஈன்றுளை ஓம்பா விடல். (82)

---

6. தண்டலையார் சதகம்

படிக்காசுப் புலவர் களத்தூரிலே செங்குந்தர் குலத்திலே பிறந்தவர்; சமயம்: சைவம். அடியிலே வரும் பாட்டுக்கள் அவர் பாடிய தண்டலையார் சதகத்திலே இருந்து எடுத்துக் கொள்ளப் பட்டன. அது நூறு பாட்டுக்கள் அடங்கியது.

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலும்
குலமுழுது நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறு பெற்றும் ஆவதுண்டோ
மன்றில்நடம் புரிவாரே தண்டலையா
ரேசொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்று மென்ன
குஞ்சரமொன் றீன்றதனல் பயனுண்டாமே. (83)

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கனுல கிற் சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே, தண்டலையாரே,
சொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. (84)

ஓதரிய தண்டலையார் அடிபணிந்து
நல்லனென் றுலக மெல்லாம்
போதமிகும் பேருடனே புகழ்படைத்து
வாழ்பவனே புருடன் அல்லால்
ஈதலுடன் உறக்கமின்றிப் பொன்காத்த
பூதமென இருந்தா லென்ன
காதவழி பேரில்லான் கழுதையோ
டொக்குமெனக் காண லாமே. (85)

கற்றவர்க்குக் கோப மில்லை
கடந்தவர்க்குச் சாதியில்லை கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்ப மில்லை
நல்லவருக் கொருகாலும் நரக மில்லை
கொற்றவருக் கடிமையில்லை தண்டலையார்
மலர்ப்பாதங் கும்பிட் டேத்தப்
பெற்றவர்க்குப் பிறப்பில்லை பிச்சை
சோற்றினுக் கில்லை பேச்சுத் தானே. (86)

பணந்தானே யறிவாகும்
        பணந்தானே வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்
        பணமில்லா தவர்பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்குந்
        தண்டலைநீள் நெறியாரே பார்மீ திற்றான்
பணந்தானே பந்தியிலே
        குலந்தானே குப்பையிலே படுக்குந் தானே. (87)

---

7. சாணக்கிய நீதி

வடமொழியிலுள்ள சாணக்கிய நீதியை மொழி பெயர்த்துத் தமிழிலே செய்தவர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள். இவர் தமிழ்ப் புலமை நிறைந்தவர் ; வடமொழிப் பயிற்சியும் உள்ளவர் ; நுண்ணிய அறிவை உடையவர் ; பல நூலாராய்ச்சி செய்தவர். இவர் சில ஆண்டுகட்கு முன் இருந்தவர்.

புத்திரபரிபாலனம்

ஐந்துவய தாகுமட்டும் ஆதரவாய்ப் பேணுக ; ஈர்
ஐந்துவய ததன்பின் ஆகுமட்டும்—மைந்தர்களைக்
கண்டிக்க ; ஈரெட்டுக் காணுமேல் மித்திரன்போல்
கொண்டிடுக; வேண்டாம் குறை. (88)

மூடன்வேடம்

ஆடையால் ஏனை அணியால் அலங்கரித்துப்
பீடுபெற வந்த பெருமூடன்—நீடவையில்
எவ்வளவும் பேசா தடங்கி இருப்பானோ
அவ்வளவும் மேன்மை அவற்கு. (89)

சுற்றத்தவன்

வேந்தர் கடைத்தலையில், வெம்போரில், நல்குரவில்,
ஏய்ந்த துயரில், இடுகாட்டில்,—வாய்ந்துவகை
பற்றும் விழாவில், பரிவுகொண்டு நிற்பவனே
சுற்றத் தவனென்று சொல். (90)

துர்க்குணன்

பற்பலநூல் கற்றுணர்ந்த பண்டிதனே ஆனாலும்,
நற்குணங்கள் எவ்வளவும் நண்ணாத—துர்க்குணனை
முற்ற வெறுக்க; முடிமேல் மணிஇருந்தென்?
புற்றரவைக் கிட்டார் புகுந்து. (91)

திருந்தாதவன்

சீறரவும் மூர்க்கனும் தீங்குபுரி வார்எனினும்,
சீறரவின் மூர்க்கனே தீயவன்காண்.—சீறரவு
மந்திரத்தால் கைவசமாம்; மூர்க்கன் வசப்படுதல்
எந்தவிதத் தால்என் றியம்பு. (92)

விட்டுநீங்கல்

உற்றகுலம் காத்தற் கொருபொருளைக் கைவிடலாம்;
குற்றமில்ஊர் பேணக் குலம்விடலாம்;—மற்றொருநா(டு)
உய்யும் படிகாக்க ஊர்விடலாம்; தன்உயிர்க்கு
வையகமும் கைவிடலாம் மற்று. (93)

நாணொழித்தல்

உண்ணும் தொழிற்கண்ணும், ஓதும் தொழிற்கண்ணும்,
எண்ணுதன தானியங்கள் ஈதலினும்,—நண்ணுமுறை
பூணும் தொழிற்கண்ணும், புத்திமான் எப்பொழுதும்
நாணம் இலாதிருக்கை நன்று. (94)

சிந்தித்த காரியம்

செவ்வன்உற நெஞ்சகத்தில் சிந்தித்த காரியத்தை
எவ்வெவர்க்கும் வாயால் இயம்பற்க;—இவ்வுலகில்
பல்லோர் அறியிற் பழுதாம்; பயன்படலும்
இல்லைஎனச் சொன்னார் எடுத்து. (95)

முயற்சி

செய்யும் தொழில்எவையும் திண்ணம் பெறமுயற்சி
செய்து நலம்அடையும் சிங்கம்போல்—வையகத்தில்
செய்யும் தொழிலைச் சிறிதுபெரி தென்னாது
செய்க முழுமுயற்சி சேர்ந்து. (96)

வினைசெயல்

மீனம் வருமளவும் மெய்ஒடுக்கி நீர்க்கரையில்
மோனமுறும் கொக்கின் முயற்சிஎனத்—தானிருந்து
காலமிடம் வாய்த்திடுதல் கண்டு, வினைபுரிக,
சாலும் முழுமுயற்சி சார்ந்து. (97)

பருவச்செயல்

பாலியத்தில் கல்வி பயிலவில்லை ; யௌவனத்தில்
சீலம் உறும்பொருளும் தேடவில்லை ;—சாலஅதன்
பின்அறமும் செய்யவில்லை ; பின்னர் நரைவருமேல்
என்ஒருவன் செய்யும் இயல்பு ? (98)

இயற்கையறிவு

வாய்த்துத் தனக்கியல்பாய் வந்தஅறி வில்லாற்குச்
சாத்திரங்கள் என்செய்யும்? தான்ஆகப்—பார்த்துணரும்
கண்ணில்லாப் பாவிக்குக் கண்ணாடி என்செய்யும்?
எண்ணுங்கால் எல்லாம் இருட்டு. (99)

8. குமரேச சதகம்

இஃது இயற்றியவர் குருபாத தாசர்; காலம்: 160 ஆண்டுகட்கு முன் ; சமயம்: சைவம் ; குலம்: வேளாளர் குலம்; இவர் புதுக் கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த புல்வயல் என்னும் ஊரில் இருந்தவர்.

கடவுள்செயல்

சேர்டாய் மரத்தினில் புறுஇரண் டிருந்திடத்
துறவு கண்டே வேடுவன்
தோலாமல் அவை எய்ய வேண்டுமென் றொருகணை
தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே எழும்பிடில் அடிப்பதற்
குலவு இராஜாளி கூட
உயரப் பறந்துகொண் டேதிரிய அப்போது
உதைத்தசிலை வேடன் அடியில்
சேடாக வல்விடம் தீண்டவே அவன்விழச்
சிலையில் தொடுத்த வாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ அவ்விரு
சிறைப்புறு வாழ்ந்த அன்றோ?
வாடாமல் இவைஎலாம் சிவன்செயல்கள் அல்லாதென்
மனச்செயலி னாலும் வருமோ
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (100)

பிறப்பினும் குணமே சிறந்தது

சிங்கார வனமதில் உதிப்பினுங் காகமது
தீஞ்சொல்புகல் குயிலா குமோ

திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலரா குமோ
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானையின் கன்றா குமோ
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர்பெரி யோரா வரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
சாலக் கிராம மாமோ
தடமேவு கடல்நீரி லேஉப்பு விளையினுஞ்
சாரசர்க் கரையா குமோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே,
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (101)

இதினும் இது நன்றென்றல்

கடுகடுத் தாயிரஞ் செய்குவதின் இன்சொலால்
களிகொண் டழைத்தல் நன்று
கனவேள்வி ஆயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றதோர் அவிவேகி உறவினின்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிகள் ஆயிரஞ் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல் நன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்குச்
சற்றுமிலை யென்னல் நன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதின் நோயற்ற
தாரித்தி ரியநன் றுகாண்

மடுவினிற் கரிஓல மென்னவந் தருள்செய்த
மான்மருக ஞன முதல்வா,
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (102)

கைவிடத்தகாதவர்

அன்னைதந் தையர்களையும் அற்றைநாள் முதலா
அடுத்துவரு பழையோரையும்
அடிபகை வரின்தப்பி வந்தவொரு வேந்தனையும்
அன்பான பெரியோரையும்
தன்னைநம் பினவரையும் ஏழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம்மையும்
தருணமிது என்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரையும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையும்
நாளுந் தனக்குறுதியாய்
நத்துசே வகரையுங் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகாதுகாண்
மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்தசர வணவள்ளலே,
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (103)

பிதாக்கள்

தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த்தவன் ஒரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒரு பிதா
சார்ந்த சற்குரு ஒரு பிதா

அவமறுத் தாள்கின்ற அரசொருபிதா நல்ல
ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோன் ஒரு பிதா
அன்புள முளோன் ஒரு பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோன் ஒரு பிதா
கலிதவிர்த் தவன் ஒரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதி யாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமலர் உதவுசிறு
மதலையென வருகு ருபரா,
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (104)

பகைக்கப்படாதவர் இவரெனல்

அரசர் பகையும் தவம்புரி தபோதனர் பகையும்
அரிய கருணீகர் பகையும்
அடுத்துக் கெடுப்போர் கொடும்பகையும் உட்பகையும்
அருளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகும் ஊரிலுள் ளோருடன் பகையும் மிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையும் மந்திர வாதியின் பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையும் ஆசான் பகையும்
உறவின் முறையார்கள் பகையும்
உற்றதிர வியமுளார் பகையும் மந்திரி பகையும்
ஒருசிறிதும் ஆகா துகாண்.

வரநதியின் மதலையென இனியசர வணமிசையில்
வருதருண சிறு குழவியே,
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (105)

பெரியோர் வாக்ய பரிபாலனஞ் செய்தோர்

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
தசரத குமார ராமன்
தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்
சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவன் அரிச்சந்திரன்
தேகியென் றோர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் தான கன்னன்
சிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
நீள்பெல மிகுத்த அநுமான்
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தினில் நளாயினி செய்தாள்
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர உகந்த துணைவா,
மயிலேறி விளையாடு குகனே, புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே. (106)

III. இனிய பகுதிகள்

1. கம்பர் நஞ்சை மாற்றியது

கம்பர் தாம்பாடிய இராமாயணத்துக்குச் சாத்துக்கவி வாங்கும் பொருட்டுச் சிதம்பரத்துக்குச் சென்றதாகவும், அப்போது தீக்ஷிதர் ஒருவருக்குப் பிள்ளை பாம்பு தீண்டி இறந்ததாகவும், அதனால் அவ் வூரிலிருந்த தீக்ஷிதர் மூவாயிரம்பேரும் அங்கே கூடியிருந்ததாக வும், அப்போது கம்பர் கீழ்வரும் பாடல்களைப் பாடி மைந்தனைப் பற்றியிருந்த நஞ்சை இறக்கி, அவனைப் பிழைப்பித்த தாகவும் கூறுகிறார்கள்:

ஆழியான் பள்ளி அணையே, அவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே,—ஊழியான்
பூணே, புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே, அகல நட. (1)

மங்கையொரு பாகர் மணிமார்பில் ஆரமே,
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே,—திங்களையும்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே,
ஏறிய பண்பே இறங்கு. (2)

பாரைச் சுமந்த படஅரவே, பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கும் மெல்லணையே,—ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவா பரணமே,
நஞ்சுடையாய், தூர நட. (3)

2. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்

ஒட்டக்கூத்தர் ஒரு பெரும் புலவர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர்; குலம்: செங்குந்தர் குலம்; காலம்: ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன். அவர் குலோத்துங்கச் சோழனுக்குப் பெண்கொள்ளும் பொருட்டுப் பாண்டிய நாட்டைச் சேர்ந்து அம்மன்னவனிடம் சோழன் பெருமை தோன்றக் கூறிய பாட்டு:

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானை
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானை
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானை
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை
ஊருக் குறந்தைநிகர் கொற்கையோ அம்மானை
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானை. (4)

புகழேந்தியார் மேல்பாட்டை மறுத்துப் பாண்டியன் பெருமை தோன்றப் பாடிய பாட்டு:

ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்த தம்மானை
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானை
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ அம்மானை
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானை
கரையெதிரே டேறியதுங் காவிரியோ அம்மானை
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை
பரவை பணிந்ததுஞ் சோழன் பதந்தனிலோ அம்மானை
பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ அம்மானை. (5)

3. பட்டினத்தார் புலம்பல்

பட்டினத்துப் பிள்ளையார் திருவெண்காட்டிலே வைசியர் குலத்திலே பிறந்தவர் ; சைவர் ; காவிரிப்பூம் பட்டினத்திலே வசித்தவர் ; துறவு பூண்டவர் ; காலம் : ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். பிள்ளையார் தம் தாயார் இறந்தபோது பாடியவை :

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கருதமுது தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி. (6)

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன். (7)

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன். (8)

4. கூத்தரும் அம்பட்டனும்

ஒட்டக்கூத்தர் தமது கேள்விகளுக்கு விடைசொல்ல முடியாத சிறுபுலவர்களைச் சிறையிட்டுவைத்துப் பின் நவராத்திரி காலத்தில் அவர்களை வருவித்து, அவமானப் படுத்துதல் வழக்கம். அவ்வாறே அவர் ஒருகால் புகழேந்திப் புலவரையும் பொறாமையினால் சிறைவைத்தனர். புகழேந்தியார் ஆங்கிருந்த புலவருள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்க்கெல்லாம் மேலும் கல்வி கற்பித்து, நவராத்திரி நாளிலே கூத்தரிடம் விடுத்தனர். அவர்கள் கூத்தர் திடுக்கிடுமாறு துணிவுடன் விடைகூறி அவரை நாணச் செய்தனர்.

கூத்தர் வினு

விண்பட்ட கொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலத்துப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின்ருய் பொட்டையாய் புகலாய் ?

அம்பட்டன் விடை

கண்பொட்டை யாயினும் அம்பட்டன் நான்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே. (9)

5. கூத்தரும் குயவனும்

கூத்தர் வினு

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா ?

குயவன் விடை

கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் வனையும் அங்குசப் பையல்யான். (10)

6. காளமேகப் புலவரும் அதிமதுர கவிராயரும்

காளமேகப் புலவர் கும்பகோணத்துக்கு அருகேயுள்ள நாதன்கோயில் என்று வழங்கும் நந்திபுரத்திலே பிறந்தவர்; பிராமணர்; சைவர்; நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னிருந்தவர்; வேடிக்கையாகப் பாடுவதில் மிகக் கெட்டித்தனம் உடையவர் பல நூல்களைச் செய்தவர் :

இவர் திருமலை நாய்க்கன் சமஸ்தானத்திலே யுள்ள புலவர்கள் தம்மைக் கவிராயர் என்றபோது பாடியது :

வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள், நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால். (11)

அதிமதுரகவிராயர் அவரை அடக்கப் பாடியது:

மூச்சு விடுமுன்னே முந்நூறு நானூறும்
ஆச்சென்றால் ஆயிரம்பாட் டாகாதா—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே, நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு. (12)

காளமேகப் புலவர் பதில் பாடியது:

இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதா—சும்மா
இருந்தால் இருந்தேன், எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிள்ளாய். (13)

IV. தனிப்பாடல்கள்

1. பச்சையப்பன் அறம்

காஞ்சீபுரம் வித்துவான் சபாபதி முதலியார் பாடியது. முதலியார் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னையில் இருந்த மிகப் பெரும் புலவர்; சைவர்; குலம்: வேளாளகுலம். இவர் பல நூல்களுக்கு உரை செய்தவர். தரும ரத்நாகரமாகிய பச்சையப்ப முதலியார் அறங்களைக் குறித்துப் பாடியவற்றுள் பின்வருவன கல்வியைக் குறித்திருப்பதால் பாடத்துக்கு எடுக்கப்பட்டன:

கல்வியைக் குறித்தது

நேயம் மிகும்சிறுவர் நீதியுடன் பல்கலைகள்
ஆய இனிதின் அமைந்ததால்—தேயம்எங்கும்
தேக்கியசீர்க் காஞ்சிநகர்ச் செல்வனும் பச்சையப்பப்
பாக்கியவான் வைத்த பணம். (1)

பரியும் சிறுவர் உளப் பால்இருளை நீக்கும்
இரவி எனலாகும் என்ப—விரவுமணிச்
சோதி மிகுகாஞ்சித் தொல்நகர்வாழ் பச்சையப்ப
நீதிமான் ஈட்டு நிதி. (2)

வடகலையும் தென்கலையும் வாய்த்த வடுகும்
இடமுள ஆங்கிலமும் இன்பாய்த்—திடமுடனே
சொற்சிறுவர் கற்றுணரத் துன்னியதால் பச்சையப்பச்
சற்குண மேரு தனம். (3)

சிறுவர் சொல்வதுபோலப் பாடியது

நல்ல வழிஅறிந்து நாங்கள் நடக்கும்வகை
கல்வி அறிவெமக்குக் காட்டியதால்—செல்வமொடு
பத்திதரும் காஞ்சிநகர்ப் பச்சையப்பப் பூபனும்
சத்தியவான் வைத்த தனம். (4)

விலங்குகள் போல விவேகம் இழந்து
கலங்கிஉழ லாதவண்ணம் கல்வி—இலங்கவே
நங்கட் களித்ததால் நல்காஞ்சிப் பச்சையப்பச்
சங்கநிதி ஒப்பான் தனம். (5)

எவ்வூரும் எந்நாடும் எங்களதே ஆம்வண்ணம்
அவ்வியம்இல் கல்வி அளித்ததால்—செவ்வி
விதுரனைநேர் காஞ்சிநகர் வேள்பச்சை யப்பப்
பதுமநிதி போல்வான் பணம். (6)

ஈன்ற பொழுதின் பெரிதுவக்க எம்தாயார்
ஆன்றபொருட் கல்வி அளித்ததால்—தோன்றுபுகழ்
வண்ணமிகு காஞ்சிநகர் வாழ்பச்சை யப்பன்எங்கள்
கண்அனையான் வைத்தகன கம். (7)

என்றும்பொய் யாவிளக்கம் எங்கள் அகந்தனிலே
மன்னும்அஞ் ஞானஇருள் மாற்றுமால்—நன்னலம்சேர்
தீர்த்தமுதல் மூன்றும் திகழ்காஞ்சிப் பச்சையப்பப்
பார்த்தன்முனம் வைத்த பணம். (8)

2. பெற்றோர் வணக்கம்

கண்ணிகள்

உற்றவரே எனைப் பெற்றவரே தினம்
 உமக்கோ நமஸ்காரம் ;
முற்றுமே நீர்செய்த உதவிக்கு நான் என்ன
 மொழிவேன் உபசாரம். (9)

பத்துமாதம் என்னை வயிற்றிலே சுமந்து
 பலதுயர் சகித்தீரே ;
எத்தனை பிராண சங்கட முடனெனை
 ஈன்றுயிர் வகித்தீரே. (10)

தேனினும் அமிழ்தினும் இனிதே எனக்குநீர்
 செப்பிய தாலாட்டு ;
வானின் அமரர்க்கும் வருமோ இதுபோல்
 மங்களத் திருப்பாட்டு. (11)

கவலை எல்லாம்என் கவலை அல்லால் வேறு
 கவலையொன் றறியீரே ;
புவியிலே என்சுகம் அல்லது வேறொரு
 பொருளையும் குறியீரே. (12)

பால வியாதிகள் எனை அணு காமலே
பத்தியம் பிடித்தீரே ;
காலம் எல்லாம்பல விரதங்கள் அனுட்டித்துக்
கருமங்கள் முடித்தீரே. (13)

இரவு முழுதுமே தூங்கா திருந்துநீர்
என்றனைக் காத்தீரே ;
அரவு முதற்பல ஜெந்துக்க ளால்வரும்
ஆபத்தைத் தீர்த்தீரே. (14)

தரணியில் என்சுகம் வேண்டியே நீர்பல
தருமங்கள் செய்தீரே ;
கருணை செய்யும்படி கடவுளைத் துதித்துநல்
காணிக்கை யெய்தீரே. (15)

பாலும் சோறும்பட் சணங்களும் எனக்கிட்டுப்
பழஞ்சோறு உண்டீரே ;
காலமெல்லாம் நல்ல சோமன்நான் உடுக்கநீர்
கந்தைகைக் கொண்டீரே. (16)

காணுத் தெய்வத்தின் அருளாலே வந்த
கண்கண்ட தெய்வம் நீரே ;
ஆணும் பெண்ணுமிரா அந்தத் தேவையும்
அன்னை தந்தை என் பாரே. (17)

வேதநாயகம் பிள்ளை.

3. பலபொருள் பற்றியவை

நெய்தல் தொழிலின் சிறப்பு

செய்யுந் தொழிலனைத்துஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை—வையகத்தில்

தெள்ளு தமிழ்வேதஞ் செப்பி அந்நாள் சீர்படுத்தும்
வள்ளுவனர் கொண்டதல்ல வா. (18)

துயர் செய்வன

தட்டான் இடத்தினில் தங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கில் உள்ளதைக் காகிதத் தச்சிற் பதிப்பதுவும்
தொட்டார் மனத்தைப் பலவாறு நாளுந் துயர்செயுமே. (19)

தண்டபாணி சுவாமிகள்.

புலவர் திறமை

போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடின்
தூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியர் ஆவரே. (20)

பாண்டியன்.

ஆடைச்சிறப்பு

மேலாடை யின்றிச் சவைபுகுந் தால்இந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமெண் ணார்நுவல் பாற்கடலோ
மாலா னவர்அணி பொன்னுடை கண்டு மகளைத் தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே. (21)

நையாண்டிப் புலவர்.

எல்லார்க்கும் விசனம் ஒன்று

பாலுக்குச் சர்க்கரை இல்லை
என்பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போட உப்பில்லை
என்பார்க்கும் குற்றித் தைத்த

காலுக்குத் தோல்செருப் பில்லை
என்பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லை
என்பார்க்கும் விசனம் ஒன்றே. (22)

கம்பர்.

கம்பர் இறக்கும்போது பாடியது

ஆன்பாலும் நெய்யும் அரம்பைமுதல் முக்கனியும்
தேன்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனும் இனி. (23)

கம்பர்.

தமிழ்நாட்டின் சிறப்பு

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. (24)

வேளூர்ப்பூதன் விருந்திட்டதைப் பாடியது

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டான்ஈ(து)
எல்லா உலகும் பெறும். (25)

ஔவையார்.

படிக்காசுப் புலவரின் அருமை

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன் உரைத்த தமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்

தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினுறு
நளினம் தானே. (26)

சொக்கநாதப் புலவர்.

கோப்பெருந்தேவி கதவைத் திறக்கப் பாடியது

நானே இனிஉனை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடம் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய இரவிகு லாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்குநின் கை இத ழாகிய தாமரையே. (27)

ஒட்டக்கூத்தர்.

கொங்கு நாட்டை இகழ்ந்தது

நீரெலாஞ் சேற்று நாற்றம் நிலமெலாம் கல்லும் முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி உண்பதோ கம்பஞ் சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும் பேயும்
காருலாம் கொங்கு நாட்டைக் கனவிலு நினைக்கொ ணாதே.

கம்பர்.

சொல்லம்பு

வில்லம்பு சொல்லம்பு மேதகவே ஆனாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி. (29)

கம்பர்.

ஆற்றங் கரையி னருகிருக்கு மாமரத்தில்
காக்கை யிருந்து கஃ கஃகெனக் —காக்கைதனை
எய்யக்கோ லில்லாமல் இச்சிச்சிச் சென்றானே
வையக்கோ னன்றன் மகன். (30)

இடைக்காடர்.

குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டி யனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவிபொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே. (31)

படிக்காசுத் தம்பிரான்.

விகடராமன் குதிரையை இகழ்ந்து பாடியது

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. (32)

சத்திரத்தின் கால தாமதத்தை இகழ்ந்து பாடியது

கத்துகடல் சூழ்நாகைக் காத்தன்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி யெழும். (33)

பழிப்பதுபோல் புகழ்வது

தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறுளோ
பூண்டசெருப் பால்ஒருவன் போடானோ—மீண்டொருவன்
வையானோ வில்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னால். (34)

காளமேகப் புலவர்.

4. சிவஞான முனிவர்

சிவஞான முனிவர் திருநெல்வேலி ஜில்லாவிலே பாவநாசத்தைச் சேர்ந்த விக்கிரம சிங்கபுரத்திலே பிறந்தவர்; தந்தையார் : ஆனந்தக் கூத்தர்; தாயார் : மயிலம்மையார்; சமயம் : சைவம்; குலம் : வேளாளர் குலம். இவர் மிகப் பெரும்புலவர்; ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னிருந்தவர்.

தமது தாயார் அடியாருக்கு விருந்திட்ட நேர்மையைப் புகழ்ந்து பாடியது.

அருந்ததியென் அம்மை அடியவர்கட் கென்றுந்
திருந்த அமுதளிக்குஞ் செல்வி —பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில். (35)

பேச்சே பாட்டாக அமைந்தது

சிவஞான முனிவர் ஒருகால் திருவாவடு துறையில் மஹா சந்நிதானம் இல்லாதபோது அவர் வேலையை நடத்தினர். முனிவர்; எப்பொழுதும் படிப்பதும், எழுதுவதும், மாணுக்கர்க்குப் பாடஞ் சொல்வது மாகவே இருப்பவர். அவருக்கு மடத்தின் வேலைகளில் சிந்தை செல்லவேயில்லை. இப்படியிருப்ப, ஒருநாள் அவர் எதிரிலே ஒரு பக்கமாகச் சமையற்காரன் வந்து, இன்னது சமைக்கவேண்டு மெனத்தெரிந்துகொள்ள நின்றுகொண் டிருந்தான். அப்போது, பாடஞ் சொல்லிக் கொண்டிருந்த முனிவர், அவனைப் பார்க்குந்தோறும் ஒவ்வொன்றைச் சொல்லிக்கொண்டே வந்தார்; அவை சேர்ந்து ஒரு பாட்டாக அமைந்தது.

சற்றே துவையல்அரை தம்பியொரு பச்சடிவை
வற்றல் ஏதேனும் வறுத்துவை—குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மென வேமிளகு
காயரைத்து வைப்பாய் கறி. (36

V. பண்ணெறி

தாலாட்டு

தாலாட்டு என்பது குழந்தைகளைத் தூங்கவைக்கப் பாடும் பாட்டு. தால் ஆட்டு எனப் பிரித்து நாவசைத்தல் எனப் பொருள் சொல்லுவார் சிலர்; அது பொருந்தாது; தாலாட்டு என்பது தாராட்டு என்னுஞ் சொல்லின் சிதைவு; அதுபோல் பாராட்டு, சீராட்டு எனச் சொற்கள் வருதல் காண்க.

இது பெரியாழ்வார் அருளிச் செய்தது. இவர் பெருமாளுக்குத் திருமாலை சாத்துந் திருப்பணி செய்து வந்தவர்; ஆண்டாள் என்னும் சூடிக்கொடுத்த நாச்சியாருக்குத் தந்தையாராகும் பேறு பெற்றவர்.

1. திருமால்

மாணிக்கம் கட்டி வைரம் இடைகட்டி
ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணி குறளனே! தாலேலோ
வையம் அளந்தானே! தாலேலோ. (1)

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண் கரிமுகிலே! தாலேலோ
தேவகி சிங்கமே! தாலேலோ. (2)

எழில்ஆர் திருமார்புக் கேற்கும் இவைஎன்று
அழகிய ஐம்படை யும்ஆர மும்கொண்டு
வழுவில் கொடையான் வயிச்சி ரவணன்
தொழுதுஉவ னுய்நின்முன் தாலேலோ
தூமணி வண்ணனே! தாலேலோ. (3)

ஓதக் கடலின் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்
மாதக்க என்று வருணன் விடுதந்தான்
சோதிச் சுடர்முடியாய்! தாலேலோ
சுந்தரத் தோளனே! தாலேலோ. (4)

கான்ஆர் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வான்ஆர் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேன்ஆர் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே! அழேல் அழேல் தாலேலோ
குடந்தை கிடந்தானே தாலேலோ. (5)

---

2. முருகவேள்

நீலமயில் வாகனனே நெட்டிலைவே லாயுதனே
கோலநிறை கோழிக் கொடிபடைத்த சேவகனே. (6)

செஞ்சதங்கை கொஞ்சச் சிறகிங் கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமைபாள் கண்களிக்க வந்தானே. (7)

சமரபுரித் தேவோ தணிகைமலைத் தேனே
அமரும் பழனிமலைக் கான மணிவிளக்கோ. (8)

சீரலைவாய் முத்தோ திருப்பரங்குன் றத்தரசோ
ஏரகத்தி லென்றும் இருந்த பெருவாழ்வோ. (9)

வந்தோர் பிணிதீர்க்கு மாமருந்தோ அன்பருக்குச்
சந்தோடம் நல்குஞ் சமரபுரி மாநிதியோ. (10)

பாலோ செந்தேனோ பழமோ பழமறையோ
மேலோர் புகழ்போரூர் வீற்றிருந்த பார்த்திபனே. (11)

திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

---

3. இராமபிரான்

கீழ்வரும் பாடல்கள் குலசேகரப் பெருமாள் அருளிச் செய்தவை; இவர் திருவஞ்சைக் களத்திலே பிறந்தவர்; இவருக்குப் பெருமாள் என்றும் பெயருண்டு. இவர் இராமபிரானிடத்தில் பெரிதும் ஈடுபட்டவர். இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியோ
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ. (12)

பாராளும் படர்செல்வம் பரதன்நம்பிக் கேயருளி
ஆராஅன் பிளையவனோடு அருங்கான மடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!
தாராளும் நீண்முடி என் தாசரதீ! தாலேலோ. (13)

சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கான மடைந்தவனே!
அற்றவர்கட்கு அருமருந்தே! அயோத்தி நகர்க் கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிற்றவைதன் சொல்கொண்ட சீராமா! தாலேலோ. (14)

கல்வி

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லவர்ஆம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. (15)

திருமந்திரம், திருமூலர்.

கொலையும் புலையும்

இந்நோய் நமக்குண்டென் றெண்ணுதே எவ்வுயிரும்
முன்நோவக் கொன்றுண்ணும் மூர்க்கர்தாம்—எந்நோவும்
பண்ணப் படுநரகில் பாவிகளின் பாவிகளென்று
எண்ணப் படுவர் இசைந்து. (16)

பாரதவெண்பா, பெருந்தேவனுர்.

அரியது

அரியது கேட்கின் வரிவடி வேலாய்,
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையும் செவிடும் கூனும் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலும் அரிதே
பேடு நீக்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிதே
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தரித்தலும் அரிதே
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே. (17)

ஔவையார்.

VI. காதை

பஞ்சதந்திரம் என்னும் சிறு நூலிலிருந்து பின்வரும் கதைகள் எடுக்கப்பட்டன. பஞ்சதந்திரம் மிகச் சிறந்த புத்தகம்; அதில் உலகத்துக்கு வேண்டிய பல நீதிகள் அடங்கியிருக்கின்றன; அஃது இப்பொழுது பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகத்திலுள்ள எல்லா இளைஞர்களாலும் ஆசையோடு படிக்கப்பட்டு வருகிறது. இக்கதையைத் தமிழில் பாட்டாகச் செய்தவர் வீரமார்த்தாண்ட தேவர் என்பவர்; இவர் சிறிதேறத் தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் போலும்.

கதைவரலாறு

பாடலி புரத்து மன்னன்
சுதரிச னன்தன் பாலர்
மூடராய்த் திரித லாலே
அவர்கள்மேல் மோகம் நீங்கி
வாடிஇங் கிவர்க ளாலே
பயனென்ன மலட்டா ஒப்பாம்
பீடிலார் பிறந்தார் அன்றே
பிள்ளைஎண் ணிக்கைக் கென்றான். (1)

கல்வியும் குலத்தைக் காக்கும்
கருத்தும்இல் லாத மைந்தர்
செல்வமும் குணமும் மிக்க
செவ்விசேர் உருவும் பெற்றென்
நல்வினை இலாரைப் பெற்று
நலிதலின் எந்த நாளும்
இல்வரு சேயர் இன்றி
இருந்திடல் இனிது நன்றே. (2)

ஆயிரம் மகவைப் பெற்றும்
ஆவதென் அம்மா மிக்க
தூயநல் லறிவ ைனை
சுதன்ஒரு வனையே பெற்றால்
தாயொடு தந்தை என்ன
தவமியற் றினரோ என்று
மாயிரு ஞாலம் போற்றும்
மரபெலாம் தழைக்கும் அன்றே. (3)

எவ்வனம் செல்வம் மிக்க
இராசதம் அவிவே கத்துள்
ஒவ்வொன்றே கேட்டுக் கெல்லாம்
உறுதுணை யாகி நிற்கும்
இவ்வகை நான்கும் கூடி
ஒருவன்பால் இருந்த என்றால்
எவ்வகை யால்அன் னோனுக்
கிகபரம் கிடைப்ப தென்றான். (4)

அங்கவன் சபையின் மிக்க
அறிஞரை நோக்கி மைந்தர்
தங்களை மடமை நீக்கும்
தகைமையர் இலரோ என்னத்
துங்கமா மறையோ னை
சோம்சன் மாஎ மூந்தே
இங்கிவர்க் கறிவால் ஒப்பார்
இலர்எனச் செய்வேன் என்றான். (5)

விஞ்சுமா மறையோன் மாற்றம்
வினவியே அரசர் கோமான்
நெஞ்சகம் மகிழ்ந்து மிக்க
நிதியொடு மக்கள் தம்மைக்
கொஞ்சமில் களிப்பி னோடும்
கொடுத்தனன் சோம சன்மா
பஞ்சதந் திரத்தி னாலே
பாலரைத் திருத்த எண்ணி, (6)

மன்னவன் குமாரர் தங்கள்
மனங்களுக் கேற்கு மாறு
நன்னயம் பெறசொற் பேசி
நண்புகொண் டிருக்கும் நாளில்
பொன்னணி மார்பீர் இன்பம்
பொழிகதை ஒன்றுண் டென்னப்
பன்னும்அக் கதைஎ தென்றார்
பஞ்சதந் திரம்என் றானே. (7)

பஞ்சதந் திரங்கள் என்னும்
பான்மைஎ துரைத்தி என்ன
வஞ்சமாம் மித்ர பேதம்
மருவிய சுகிர்ல்லா பம்சீர்
விஞ்சுமா நிலத்தில் சந்தி
விக்ரகம் அர்த்த நாசம்
அஞ்சலில் அசம்பி ரேக்ஷ்ய
காரித்வம் ஆம்அ வற்றுள், (8)

மித்திர பேதம் நட்டை
விலக்கியே பகையுண் டாக்கல்
ஒத்தவர் நட்புக் கூட்டல்
ஓதிய சுகிர்ல்லா பந்தான்
மெத்தவும் பகைத்து ளாரை
விரும்பிநட் பாக்கிப் பின்னர்ச்
சத்துரு நாசம் பண்ணல்
சந்திவிக் கிரக மாமே. (9)

கிடைத்ததை அழியப் பண்ணல்
கெழுமிய அர்த்த நாசம்
திடப்பட விசாரி யாமல்
செய்யும்கா ரியத்தின் நாமம்
கடைப்படும் அசம்பி ரேக்ஷ்ய
காரித்வம் என்ப தாகும்
தடப்பெருந் தோளீர் என்றான்
சதுர்மறைக் குரிய கோமான். (10)

மாதவன் உரைக்கும் சூழ்ச்சி
மன்னவன் குமாரர் நெஞ்சில்
காதலை விளைத்த லாலே
கமலமார் பினனை நோக்கி
ஈதியாம் அறிய வேண்டும்
எமக்கிதை விரித்து நன்றாய்
ஓதுக பெரியோய் என்ன
உயர்மறை யவன்சொல் வானால். (11)

2. சிங்கமும் முயலும்

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேஒர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
ஆடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலா மொருங்கு கூடி, (12)

ஆணிளஞ் சிங்க மேஉன் அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா விதத்தினில் தினமொன் றாக
ஊண்உனக் களிப்போ மென்ன உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய் அருந்திஅங் கிருக்கும் நாளில்,

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள் தன்முறை வருத லோடும்
இனிஅது விடாது நம்மை எனினும் ஓர்எடுப் பெடுத்து
வினைஇப் போது செய்து வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும் நமக்குநற் புகழுண் டென்றே.

கருதி அச்சிங் கத்தின்தன் கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி மன்னன்நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும் பிந்துவ தில்லைப் பிந்தி
வருவதென் உரைநீ என்று மனந்தனில் சினந்து கூற, (15)

ஐயநின் பசிவே ளைக்கு அடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்ய சிங் கத்தைக் கண்டு வெருவி அங்கொளித் திருந்தேன்
பையவே சிங்க மாங்கோர் பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யஉன் பக்கல் வந்தேன் சுவாமியென் றிறைஞ்சி நிற்க, (16)

சிங்கம் நாம்அல்லால் வேறோர் சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டுவாஎன் றழைத்தலும் அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த தன்நிழல் உருவந் தோன்ற, (17)

தன்உரு நிழலைத் தானே சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித் துளங்கியே கலங்கி நெஞ்சம்
இன்னலால் உயிரை நீத்து இறந்தஃதால் உபாயத் தாலே
என்னதான் ஆகா தென்று இசைத்தனன் தேவ சன்மா.(18)

---

3. முயலும் பூவையும்

பாவிகள் மோனர் போலும் பலவிர தியர்கள் போலும்
ஓவறு சகாயர் போலும் உறமுறைச் சுற்றம் போலும்
மேவுவர், அவரைச் சேரின் மேன்மைய ரேனும் உய்யார்
பூவையும் முயலும் முன்ஓர் பூனையைச் சேர்ந்த வாறே. (19)

என்னஅக் கதையே தென்றே இறைவன்தன் குமரர் கேட்க
முன்னியே சன்மன் சொல்வான் முன்னமோர் மரத்தின்
தன்னிக ரின்றி வாழும் தனிமுயல் ஒன்று வந்தே [மேலே
உன்னுமோர் பொந்திற் சேர்ந்தங் குட்புகுந் திருந்த தன்றே.

பூவைஒன் றங்கு வந்திப் பொந்துநான் இருக்கும் வீடு
நீவரு வானேன் என்ன, நிழலொடு தருக்கள் சாலை
வாவிநல் கூபம் செல்லும் வழியினில் தண்ணீர்ப் பந்தல்
சாவடி இவைகள் எல்லாம் சகலர்க்கும் பொதுவே என்ன,(21)

அங்கவை இரண்டுஞ் சண்டை ஆகிப்பின் மத்தி யஸ்தர்
தங்களைக் கேட்போ மென்று தனிமுயல் அழைத்துப் போக

இங்குநாம் வழக்கா வந்தோம் இருதலே வழக்குந் தீர்க்கும்
துங்கர் ஆர் என்று பூவை சொல்லவே முயலும் சொல்லும்.

கருதிய யமுனை யாற்றங் கரையிலே தவத்தைப் பண்ணும்
பொருவில்கூர்ம் பல்லன் என்னும் பூனையார் சொல்வா ரென்ன,
வெருவியே பூனை பக்கல் மேவிநாம் செல்வ தெவ்வா(று)
உரையெனத் தூர நின்றே உரைப்பம்என் றழைத்துப் போக,

இருவரும் போனார் அந்த இருடியார் தவத்தைக் கண்டார்
பெரியவர் இவர்தாம் நம்மைப் பிடிப்பது செய்யார் என்று
கருதினர் பணிந்தெ ழுந்தார் கைகளும் கட்டி நின்று
பரவினர் யோகம் நீங்கிப் பார்த்தனர் பூனை யாரும். (24)

ஆர்எவர் நீங்கள் நம்மை அறிந்துநீர் இங்கு வந்த
காரியம் சொல்லும் என்று கபடனார் உரைக்கத் தங்கள்
பேரொடு வழக்குஞ் சொல்லப் பெருகிய மூப்பி னாலே
நீர்உரைப் பதுகே ளாது நெருங்கிவந் துரைக்க என்ன, (25)

சற்றிடம் கிட்டி வந்து சாற்றஇம் மாற்றம் காதில்
உற்றது போலும் பாதி உறாதது போலுங் கேட்டோம்
மற்றினிப் பட்ச பாத வழக்குநாம் உரைப்ப தில்லை
குற்றமிங் கொருவர் மீதில் கூறிடில் கோபம் ஆமே (26)

தருமமே விரும்பு வாரைத் தருமமே விரும்பிக் காக்கும் ;
தருமமே இகழு வாரைத் தருமமே இகழ்ந்து நிற்கும் ;
தருமமே மெய்யாய் நின்று சகலமும் செய்த லாலே
தருமமே சொல்வ தல்லால் சற்றும்நாம் பொய்சொல் லோமே.

எண்ணிய விரதம் எல்லாம் இயற்றினம் இவைக்கு மேலாம்
புண்ணிய விரதம் என்னும் பொய்சொலா விரதம் ஒன்று
நண்ணிய உயிரைக் கொல்லா நலம்தரும் விரதம் ஒன்று
மண்ணினில் அநுட்டிப் போம்நாம் வழக்கில் ஓரம்சொல் லோமே.

கிட்டநீர் வந்து சொன்னால் கேட்கும்நம் காது நம்மை
விட்டுநீர் தூர நின்று விளம்பினால் கேளா தென்று
துட்டனார் யார் சத்தால் துலங்குகூர்ம் பல்லன் என்பேர்
இட்டமார்ச் சாலன் சொல்ல இவைதம துளத்தில் எண்ணி,

பொய்கள்போல் சொன்ன எல்லாம் விசுவசித் திரண்டும் செல்லக்
கைகளால் பிடித்துக் கண்டம் கடித்திரத் தங்கு டித்தே
செய்கப டான பூனை செருக்கிஅங் கிருக்கச் சேர்ந்த
மொய்சிறைப் பூவை யோடே முயலும்அங் கிறந்த தன்றே (30)

4. கோநாயும் ஆட்டுக்குட்டியும்

தாமரை குவளை அல்லி தழைத்திடும் ஓடை யொன்றில்
தோமுறு கோநா யொன்று துறையினில் நன்றே தெண்ணீர்
ஏமுறப் பருகுங் காலை எளியதோர் ஆட்டுக் குட்டி
நாமுறச் சென்றே யங்கன் நாயினைக் கண்டே அஞ்சி, (31)

கூரிய கோநாய் நின்ற துறையினுக் கயலே கீழ்பால்
நேரிய நன்னீர் தன்னை நடுங்கியே யுண்ணுங் காலை
காரிய மிக்க கோநாய் கண்டஅவ் வாட்டைச் சீறிக்
கோரிய தென்னை ? நீரைக் கலக்கினை கொழுப்புக் கொண்டு,

உன்னுடை சிறுமை பொன்றும் உணர்கிலை ; உணரா யாயின்
என்னுடை பெருமை தன்னை யுணர்ந்துமென் எண்ணாய் ; பேதாய்,
முன்னுடை அகந்தை தன்னில் முழுகியே யுள்ளாய்; பாரில்
என்னுடை ஆண்மை சற்றே காட்டுவேன் இப்போ' தென்று,

கூறியே கோநாய் ஆட்டைக் குறுகிட, வாடும் ஆடு
'தேறியே செய்தே னில்லை ; சிறியனேன் தேவ ரீரை
மீறியே செய்யேன் ; உண்ட மிச்சிலை நுகர்ந்தேன்' என்றே
ஏறியே செல்லக் கண்ட கோநாயும் எதிர்த்துச் சென்று, (34)

" நில்லு நில் ; நெடிய காலா, நிகழ்த்திய தென்னை ? நீயே
சொல்லு சொல்' என்ற தட்டி மீசையுந் துடிக்க, வாயில்
பல்லினை இலங்கக் காட்டப் பார்த்திடும் ஆட்டுக் குட்டி
புல்லிய கரங்கள் கூப்பிப் புகன்றிடும் பொல்லா நாய்க்கே:

'ஐயனே, அடியேன் ஒன்றும் அறிகிலேன் ; அந்தோ ! நீரை
மெய்யதே கலக்கவில்லை ; மேலொன்றுஞ் செய்ய வில்லை ;
உய்யவே சிறுவன் செல்ல உத்தரம் அளிப்பீ ராயின்
பையவே சென்றென் வீட்டில் பார்த்திடு வேன்பெற் றோரை;'

என்றதைக் கேட்ட கோநாய் 'இன்றுநீ செய்தாய் இல்லை,
ஒன்றிய வோராண் டின்முன் உண்மையாய்த் தீமை செய்தாய்;
என்றுநீ கிட்டு வாய்என் றிருந்தனன் எதிர்ப்பட்டா யின்(று);
அன்றுநீ செய்த குற்றம் ஆர்செய்வார்!' எனவு ரைப்ப, (37)

கேட்டதும் ஆடு கீழே வீழ்ந்துமுன் முழங்கா லிட்டு
'நாட்டினில் நான்பிறந்து நான்குமா தந்தான் ஆச்சு ;
காட்டிய பழிக்கு நான்என் கழறுவேன்' என்ன, கோநாய்
'நாட்டிய பழியை உன்றன் தந்தையே நன்று செய்தான்; (38)

தந்தையும் செய்தா னில்லை என்றுநீ சாற்று வாயேல்,
தந்தைக்குத் தந்தை யென்பேன் தருக்குனக் கென்ன? உன்வாய்
வந்தன பேசுகின்றாய்' என்றுமேல் வீழ்ந்தவ் வாட்டை
முந்துறக் கொன்றே யுண்டு மூர்க்கநாய் ஒழிந்த தன்றே. (39)

உளத்தொரு கருத்துக் கொண்டே உலகினர் காணு மாறு
வளத்தினில் வேறு சொற்கள் வகுத்துக்கா ரணம்போற் கூறும்
உளத்தினிற் கொடியோர் செய்கை உத்தம ஆட்டைக் கொன்ற
குளத்தினிற் கோநாய் செய்கைக்கு ஒப்பெனக் கூற லாமே.

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

VII. தமிழ்நாடு

அழகு நிறைந்த தமிழ்நாடு, தேவர்
ஆலயஞ் சிறந்த தமிழ்நாடு;
ஒழுகு காவிரி வைகை பொருநை
ஓடிப் பாய்வது தமிழ்நாடு. (1)

வீரம் மிகுந்த தமிழ்நாடு, நல்ல
வேதியர் ஓங்குந் தமிழ்நாடு;
சாரம் அடங்கிய தமிழ் வேதம்
தழைத்து நிற்பது தமிழ்நாடு. (2)

வள்ளுவர் பிறந்த தமிழ்நாடு, பெரு
வள்ளல்கள் வாழ்ந்த தமிழ்நாடு;
ஒள்ளிய தரும நீதிகளை யாரும்
ஒப்ப வகுத்த தமிழ்நாடு. (3)

மானம் மிளிரும் தமிழ்நாடு, வீர
மாதர் விளங்கிய தமிழ்நாடு;
ஞானந் திகழுந் தமிழ்நாடு, நாடா
நல்வளங் கொண்ட தமிழ்நாடு. (4)

அவ்வை பிறந்த தமிழ்நாடு, முடி
அரசர் ஆண்ட தமிழ்நாடு;
செவ்வைசெய் நாவலர் சங்கத்திற்
செய்யுள் செய்த தமிழ்நாடு. (5)

அன்பு நிரம்பிய தமிழ்நாடு, பல
அடியார் தோன்றிய தமிழ்நாடு;
இன்பு பொருந்தும் இல்லறத்தில் விருந்
தினிமை தவழும் தமிழ்நாடு. (6)

நானிலம் போற்றுந் தமிழ்நாடு, உயர்
நாகரிகம் மிக்க தமிழ்நாடு ;
வானிலந் தன்னினும் வளர்ந்து புகழை
வாரிக் கொண்டது தமிழ்நாடு.

ஒழுக்கம் வாய்ந்த தமிழ்நாடு, அறி
வொளியைப் பரப்புந் தமிழ்நாடு
இழுக்கந் தவிர்ந்த தமிழ்நாடு, எங்கும்
இசை மணப்பதாந் தமிழ்நாடு.

கலைகள் விஞ்சிய தமிழ்நாடு, பெருங்
கட்டடம் ஒளிருந் தமிழ்நாடு ;
மலைகள் வணங்கும் பொதியமெ னுந்தனி
மன்றம் அமருந் தமிழ்நாடு. (9)

அருளைப் பொழியுந் தமிழ்நாடு, சுவை
அன்னம் படைக்குந் தமிழ்நாடு ;
இருளைத் துரத்திக் கல்வி விளக்கு
ஏற்றி வைப்பது தமிழ்நாடு. (10)

நீர்வளம் ஓங்குந் தமிழ்நாடு, விளை
நிலங்கள் நிறைந்த தமிழ்நாடு ;
கார்வளங் குன்றினும் மனங்குன்றாத
காராளர் வாழ்வது தமிழ்நாடு. (11)

நண்ணியம் பரந்த தமிழ்நாடு, கல்விக்
கம்பர் உதித்த தமிழ்நாடு ;
புண்ணிய நாயன்மார் ஆழ்வார்கள்
புகழை விரித்த தமிழ்நாடு. (12)

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

குறிப்புரை

I. கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்து - கடவுளை வாழ்த்தும் வாழ்த்து. கடவுள், கட பகுதி, உள் விகுதி ; கடந்த பொருள்.

விநாயகர்

(1) செஞ்சொல்-வழுவில்லாத சொல். வாக்கு-சொல் வன்மை. பீடு-பெருமை. காதல்-அன்பு. தம்கை கூப்புவர் எனக் கூட்டுக. வானோரும் - சிறப்புப் பொருந்திய தேவர்களும் ; உம் உயர்வு மிகுதியைக் காட்டுகிறது ; ஆதலால் உயர்வு சிறப்பு.

சிவபெருமான்

(2) பண்-பாட்டு. எண்ணிறைந்த நெய்-(எள்+நிறைந்த) எள்ளில் நிறைந்த நெய். எள்ளிலே நெய் எங்கும் இடைவிடாமல் நிறைந்திருப்பதுபோலக் கடவுள் மேல், கீழ், நடு, உள், பக்கம் எங்கும் நிறைந்திருக்கிறார் என்பது கருத்து. மிடறு-கழுத்து. சிவபெருமான் கடலிலே பிறந்த நஞ்சை உண்டமையால் அவர் கழுத்து கறுத்தது என்க. கையொத்து-கைசேர்ந்து.

முருகர்

(3) வந்தனை-வணக்கம். மலரடி - மலரைப் போன்ற பாதம் ; மலர் இங்கே தாமரை மலரைக் குறிக்கும். பைந்துணர்-பசுமையான பூங்கொத்து. பை-பசுமை. பாகதி-மேலான மோட்சம். கந்தன், ஸ்கந்தன் என்னும் வடமொழித்திரிபு. கருவை-ஓரூர்.

(4) நாயேன்-நாயை ஒத்தவன்; நாயைப்போலத் தாழ்ந்தவன்; நாய் உண்டதைக் கக்கி உண்பது அதற்கு இழிவு. சீர்-பெருமை. நன்கு-நன்மை. பேயேன் பேயை ஒத்தவன்; பேய்க்குத் திரிதலும்,

பெரும்பசி கொள்ளுதலும் இயல்பு. போரூர்-செங்கற்பட்டுத் தாலுக்காவிலுள்ள ஒரு சுப்பிரமண்ணிய ஸ்தலம்.

(5) ஏழை-அறிவில்லாதவன். தீது தீமையைத் தரும் செயல். தனிமுதல்-ஒப்பற்ற முதற்கடவுள்.

(6) ஆணிப்பொன்-கெட்டிப்பொன் (Solid Gold). என்கோ-ஐயவினு. அருளாழி-கிருபாசமுத்திரம். பேணி-விரும்பி. பணிவார், வினையாலணையும் பெயர். பானு-சூரியன். அணி-அழகு.

(7) குழவி-குழந்தை. கெழுதகை-உரிமை. சேய்-முருகன்; செம்மை நிற முடையவன் என்பது பொருள். தேர்-தேடு.

திருமால்

(8) நிலந்தரம் செய்யும்-ஒழிக்கும். நீள்விசும்பு-உயர்ந்த சுவர்க்கலோகம். பெருநிலம்-வைகுந்தம் வலம்-வெற்றி. பெற்றதாய்-நற்றாய். ஓம் நமோ நாராயணாய: என்பது அஷ்டாக்ஷர மந்திரம்.

(9) கோலம்-பன்றி. அடியவன்-பிரகலாதன். அடியவற்காக என்பது ஈறுதொக்கது. சோதி ஒளி. வேதம-அறிதற்குக் கருவியாக உள்ளது. வேழம்-யானை; கஜேந்திரன். முதலே-ஆதிமூலமே. இறை-தெய்வம். என்றான், சொல்லெச்சம்.

கலைமகள்

(10) ஆடகன்-பிரமதேவன். சீறடி, சிறுமை + அடி; பெண்களுக்கு அடி, நெற்றி. இடை சிறுத்திருக்க வேண்டும். அணங்கு-தெய்வம். கற்பகம் கேட்டதைக் கொடுக்கும் இந்திரலோக விருக்ஷம்.

(11) ஆய-ஆகிய வய-பொருந்த தூய-பரிசுத்தமான உரு-நிறம். உருப்பளிங்கு போல்வாள் - பளிங்கைப்போன்ற வெண்மை நிறமுடையவள். உள்ளத்தின் உள்-(Heart of hearts) இடர்-துன்பம்.

(12) படிகம்-பளிங்கு. கடி-மணம். துடி-உடுக்கை. துடியிடை-உடுக்கையைப் போலச் சிறுத்த இடுப்பு. அல்-இரவு. அனவரதமும்-எப்பொழுதும். கல்-அறிவில்லாத சடம் போன்றவன்; உவமையாகு பெயர். கவி-பாட்டு.

(13) விலகரும் அருள்-பிரித்துச் சொல்ல முடியாத அருள்; அஃதாவது அருளே வடிவானவர் என்பது கருத்து. மிக்கூர்-மிகுந்த. விமலன்-பரிசுத்தமானவன். அலகு-அளவு. கற்பம்-யுகம் முடியுங் கால அளவு. மும்மைத்தாய உலகம்-மேல், கீழ், நடு என்னும் மூன்று லோகம். பரவினும்-வாழ்த்தினாலும். கொல்-அசை.

(14) கதிரவன்-சூரியன். கிரணக்கை-கிரணமாகிய கை, நீண்டும் முடங்கியும் வருதலால் கை என்றார். புட்கள்-பறவைகள். சுதி-சுருதி. தரு-மரம். பொதி அலர்-தங்கிய மலர். பூசம்-ஐம்பூதம்: மண், நீர், நெருப்பு, காற்று, வெளி. அதிர்கடல்-ஒலிக்கின்ற கடல். அகம்-மனம் வாழ்த்தாதெனனே-வாழ்த்தாது என்ன காரணம்; தொகுத்தல் விகாரம். கடவுளை, எல்லாம் தம் கடமைகளைச் செய்வதால் தொழுகின்றன என்பது கருத்து.

திருஅங்கமாலை

(15) தலைமாலை-தலையாலாகிய மாலை. சிவபெருமான் உலக முடிவில் அழிந்துபோன அன்பராகிய தேவர்கள் தலையை மாலையாக அணிந்து கொள்வர். பலிதேரும்-பிச்சையைத் தேடும். வணங்காய், முன்னிலை வினைமுற்று.

(16) எண்டோள்-எண் + தோள். காண்மின்களோ என்பதில் உள்ள ஓகாரம் வினா.

(17) எரி-நெருப்பு. திறம்-புகழ்களாகிய கூறுபாடுகள்.

(18) உரி-தோல். (19) மஞ்சு-மேகம். நின்மலன்-மலம் இல்லாதவன்.

(20) பை-படம். பாம்பரை ஆர்த்த பரமன்-பாம்பை இடுப்பிலே கட்டிய கடவுள்; சிவபெருமான். தொழீர்-முன்னிலை வினைமுற்று.

II. நீதி

நீதிவெண்பா

(1) செறிந்த-நிறைந்த. வென்றி-வெற்றி, வனசரன்-காட்டில் வசிப்பவன்; வேடன். வேதியன்-வேதம் ஓதுபவன்; பிராமணன். வேந்து-அரசன்; விகுதி பெறாமல் நின்றது.

(2) மூன்றாவது விழி-அறிவுக்கண். ஈவோர்க்கு விழி எழு என்றது ஐந்து நகக் கண்களையுங் கூட்டி. அநந்தம்-அநேகம். ஞானம் பெற்றோர் எல்லா வகையாலும் அறிவைப் பெறுவர் என்பது கருத்து.

(3) தாபம்-வருத்தம். நகுலன்-கீரி. மறைப் பொற்கொடி-பார்ப்பனி; மறை-வேதம.

(4) விடம்-விஷம். எய்தும்-சேரும். பைங்கணரவு-பசுமையான கண்களையுடைய பாம்பு. துர்ச்சனர்-தீயோர்.

(5) வெம்பு-கோபத்தையுடைய. கரி-யானை; கருமையுடையது.

(6) பன்னி-மனைவி. நற்றாயர்-நல்ல தாய்மார். செறிதல்-நிறைதல்.

(7) வெகுண்டு-கோபித்து; வெகுள்-பகுதி. இடுக்கண்-துன்பம். பாலோடு சேர்ந்த நீர் ஆவியாகப் போகும் போது பாலும் பொங்கி விழ முயலும்; உடனே நீரைத் தெளித்தபோது பாலடங்கும். அதுபோல நண்பர் தம் உயிரையும் கொடுத்துப் பிறர் துயரை ஆற்றுவர் என்பதாம்.

(8) நயம்-நன்மை. ஆக்கை, யாக்கை-உடம்பு. கோலம்-வடிவம்.

(9) பனை சிறுநன்றி செய்தால் பெருநன்மையை விளைக்கும்; தெங்கு செய்த அளவுக்கு நன்மை செய்யும்; கதலி பெருநன்மை செய்தால் சிறுபயனை அளிக்கும் என்க. மானுவர்-ஒப்பாவர். முத்தலரும்-முத்தைப்போலப் பூக்கும். கதலி-வாழை. தேம்-இனிமை. கமுகு-பாக்குமரம்.

நன்னெறி

(10) வினையவர்-குற்றமுள்ள மனமுடையவர். பேசு, முதனிலைத் தொழிற் பெயர். என்க, அசை. நல்லோன்-சாக்கிய நாயனார். எறி சிலை-வீசிய கல். நன்னுதால், மகடூஉ முன்னிலை. ஒண்மை-மேன்மை. கருப்பு வில்லோன்-கரும்பை வில்லாக உடையவன்; மன்மதன். சாக்கிய நாயனார் கல்லை அன்போடு எறிந்தால் நன்மையே; மன்மதன் மலரைக் கெட்ட எண்ணத்தோடு எறிந்தால் தீமை.

(11) நீக்கம் அறும் இருவர்-ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத நண்பர் இருவர் புணர்தல்-சேர்தல். நொய்தாகும்-அற்பமாகும். புல்லுதல்-சேர்தல். திணமை நிலை-உறுதியாக இருக்கும் தன்மை.

(12) கவர்ந்து-தன்வசப்படுத்தி. ஒங்கு சினம்-எழுகின்ற கோபம். தடம் கரை-உயர்ந்த இடத்தையுடைய கரை. விடுத்தல்-தொழிற்பெயர். விளம்பு-சொல். தான-அசை.

(13) ஒன்பான்வாயில்-நவத்துவாரம். சீதநீர்-குளிர்ந்தநீர். பொள்ளல்-ஓட்டை. வீதல்-ஒழுகுதல். திருந்திழாய், மகடூஉ முன்னிலை.

(14) அல்குகழி-சிறுமையான கழி ; அல்கல்-சுருங்கல். செல்லாதோ-செல்லும்; ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு.

(15) இருநீர்-பெரிய நீர்நிலை, கடல். வியன்-பெரிய. அழல்-நெருப்பு. சந்திரனைக் கண்டு கடல் பொங்குதல் இயல்பு. அதிர்தல்-ஒலித்தல்.

(16) எழுத்து-இலக்கணம். ஆயும்-ஆராய்ந்து மனத்தால் அறியும். அவிர்சடை-விளங்குகின்ற சடை. கண்டளவில்-கண்ட அளவில். சுரநீர்-கங்கை, தெய்வ நதி. மிகை-மிகுதி.

(17) புகல்வது-சொல்லுவது. சேக்கை படுக்கை. அன்று ஓ, அசைகள். வாய்-ஏழாம் வேற்றுமை உருபு.

(18) முனிவு-கோபம். நல்குர்-கொடுப்பார். மூதறிஞர்-முதுமை + அறிஞர் ; முதிர்ந்த அறிவை உடையவர். உள்ளக்கனிவு-மனஉருக்கம். கயவர்-கீழ்மக்கள். கதலி-வாழை. அறை-சொல். நனி விளைவில் காயினும் ஆதும்-மிக்க விளைவில்லாத காயாக இருக்கும் நிலையிலும் பயன்படும்.

(19) கூற்றம்-இயமன். உய்க-பிழைக்கக்கடவர். கோலுதல்-கட்டுதல். பெருகுதற்கண்-பெருகும்பொழுது. கொல்வான், எதிர்கால வினையெச்சம்.

முதுமொழிக்காஞ்சி

(20) ஆர்கலி - கடல், சிறந்தன்று - சிறந்தது. ஓதலின் என்பதில் இன் ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருள்.

(21) மேதை-அறிவுடைமை.

(22) வண்மை-கொடைக்குணம். வாய்மை-உண்மை.

(26) பேர்இல்-பெருங்குடி. ஈரம்-அன்பு. அறிப - அறிவர்.

(28) சோரா, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

(32) கேளிர்-சுற்றத்தார். (33) ஆசாரம்-ஒழுக்கம்.

(34) வள்ளியன்-கொடுப்பவன். அன்மை அல்லாமை.

(36) துவ்வாது-நீங்கி யொழியாது. (38) புலைமை-கீழ்மை.

(39) கண்மாறல்-கண்ணோட்ட மொழிதல். (40) துணைப் பாடு, உதவியாவது; முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(42) நோா நெஞ்சம்-ஒவ்வாத மனம்.

(43) நோாமல்-வழிபாட்டிற்கு உடன்படாமல்.

(45) ஒப்புரவு-உலக நடை. தகுவரவு-தக்கது.

(47) சாக்காடு-இறப்பு ; காடு விகுதிபெற்ற தொழிற் பெயர்.

(48) நசை-ஆசை. நல்குரவு-வறுமை.

(49) இசை-புகழ். எச்சம்-பின்னிற்பது.

(50) ஊங்கு-சிறந்தது. இளிவரவு-இழிவு.

(53) கையுறல்-கருமமுடிதல்.

(54) தற்காத்தல்-தன்னைக் காத்தல்.

(55) உறுவினை-மிக்க தொழில். காய்வோன்-கோபிப்பவன்.

(56) நோனுதோன்-பொறுக்காதவன். (57) வேட்கை-ஆசை.

(58) வெய்யோா-விரும்புவோர். (59) குறளை-கோட்சொல். மறை-இரகசியம். (63) பாத்தூண்-பகுத்துண்ணும் உணவு.

(64) தண்டான்-மாறுன். (65) வழிபாடு-ஆசிரியனை வழிபடு தல். (66) நிற்றல்-வீடுபேற்றுக் குரிய வழியில் நிற்றல். (67) சூழ்ச்சி-உபாயம். (68) மிகுதி-மேன்மை. (69) ஏமம்-பாதுகாவல்.

இனியவை நாற்பது

(70) ஏவது-ஏவுகின்ற தொழில். இளங்கிளைமை-இளம் பருவத்தை யுடையவன்; சுற்றத்தான். நவை-குற்றம். போகான்-சேராதவனாய். கோள்-கொள்ளுதல்.

(71) கழறும்-புகழ்கின்ற. அவை-சபை. மயரிகள்-மயக்கமுடையவர். திரு-செல்வம். தீர்வு-ஒழிவு.

(72) தானம்-இடம். ஊனம்-குற்றம்.

(73) மாண-மாட்சிமைப்பட. எட்டுணை, எள் + துணை. ஆற்ற-மிகவும்.

(74) நட்டார்-நண்பர். நனி-மிகுதி; உரிச்சொல். பட்டாங்கு-உண்மை. தக்குழி-தகுந்த இடம்; சற்பாத்திரம். முட்டு-குற்றம்.

(75) நோன்பு-விரதம். ஒல்லுந் துணை-இயன்ற அளவு. உய்ப்பான்-செலுத்துபவன். பொறை-பொறுமை. காமுற்று-விரும்பி.

(76) தகையாண்மை-அழகு பொருந்திய ஆண்மை. ஆண்மை-ஆளுந்தன்மை; கோள்முறை-கொள்ளும் வகை. பெண்மை-விரும்புந்தன்மை. பட-அழிய.

(77) ஆற்றான்-செய்ய முடியாதவன். ஆக்கம்-செல்வம். அல்லவை தீய சொற்கள்.

இன்னா நாற்பது

(78) ஆற்றல்-வன்மை. படை-ஆயுதம். இன்னா-தீயது. மாற்றம்-சொல்.

(79) பகல்போலும் நெஞ்சம்-களங்க மில்லாத மனம். நகை-மகிழ்ச்சி. நார்-அன்பு. இகல்-போர். ஓட்டு-ஓடுதல். நயம்-நன்மை.

(80) கூர்-மிகுதி. புரிவு-செய்தல்.

(81) வைப்பு-வைத்தல். வனப்பு-அழகு. எண்-கணக்கறிவு.

(82) ஆன்றவிந்த சான்றோர் - நிரம்பிய அறிவுடையவராய் அடங்கிய பெரியோர். பேதை-மூடன். புகல்-நுழைதல்; பகு பகுதி. மான்று - மயங்கி. வழங்கல் - நடத்தல். நோன்று - துன்பங்களைப் பொறுத்து அவிந்து-அடங்கி. நோன்பு-விரதம். ஓம்பா விடல்-பாதுகாவாது விடுதல்.

தண்டலையார் சதகம்

(83) மன்று-சபை; பொற் சபை; சிதம்பரம். நடம்-நடனம், தண்டலை ஓரூர். ஈன்று, ஈன் பகுதி. குஞ்சரம்-யானை.

(84) சங்கை-ஐயம். அங்கண்-அழகிய இடம். திங்கள்-சந்திரன்.

(85) போதம்-அறிவு. காதம்-இரண்டு நாழிகை வழித் தூரம்.

(86) கடந்தவர்-உலகத்தைத் துறந்த முனிவர். கொற்றவர்-அரசர். மலர்ப் பாதம்-தாமரை மலரைப் போன்ற திருவடி.

(87) பரிந்து-விரும்பி. பான்மை-தன்மை. பார்-பூமி.

சாணக்கிய நீதி

(88) ஆதரவு-அன்பு. மித்திரன்-நண்பன்.

(89) அணி-ஆபரணம். பீடு-பெருமை. நீடவை, நீடு + அவை-சிறந்த சபை.

(90) வெம்போர்-கொடிய சண்டை. நல்குரவு-தரித்திரம். எய்ந்த-பொருந்திய. இடுகாடு-பிணத்தைப் புதைக்கும் இடம்; மயானம். உவகை-மகிழ்ச்சி. விழா-திருநாள். பரிவு-அன்பு.

(91) பண்டிதன்-கல்வி நிறைந்தவன். (93) வையகம்-பூமி.

(95) செவ்வன்-நன்றாக. இயம்பற்க - சொல்லவேண்டாம்; இயம்பு பகுதி, க வியங்கோள் வினைமுற்று விகுதி, அல் எதிர்மறை விகுதி.

குமரேச சதகம்

(100) சோடு-இரண்டு. சேடாக-நன்றாக. கணை-அம்பு. சிலை-வில். வாளி-அம்பு. குகன்-மலைக் குகைகளிலும், அடியார் மனக்குகைகளிலும் இருப்பவன். புல்வயல் ஓரூர். குமரேசன்-குமர + ஈசன்.

(101) தீஞ்சொல்-இனிய சொல். திரை-அலை. வாவி-குளம். செங்கஞ்சம்-செந்தாமரை. கானகம்-காடு. அசடர்-குற்றமுடையவர். சாலக்கிராமம்-பூசனைக்குரிய விஷ்ணு முத்திரையுள்ள ஒரு வகைக் கல். செந்தமிழ்க் குறு முனி-செந்தமிழிலே இலக்கணஞ் செய்த அகத்திய முனிவர். குறுமுனி-குறுகிய வடிவுடையவர்.

(102) வேள்வி-யாகம். வேள்-பகுதி. சம்பத்து-செல்வம்.

(103) தருணம்-வேளை. சரணம்-அடைக்கலம். நத்து சேவகர்-விரும்பி சேவிக்கும் சேவகர். அயில்-வேல். சரவண வள்ளல்-சரவணப்பொய்கையில் அவதரித்து ஒரையாது கொடுப்பவரே.

(104) வித்தையைச் சாற்றினவன்-வித்தியாகுரு. சற்குரு-ஞானசாரியன். அவமறுத்தல்-துன்பத்தை ஒழித்தல். அஞ்சல்-பயப்படாதே. கவளம்-ஒரு கை கொண்ட உணவு. கலி-துன்பம். காசினி-பூமி. மவுலி-முடி. மதி-சந்திரன். புனைதல்-தரித்தல். விமலர்-பரிசுத்தமானவர். மதலை-குழந்தை.

(105) தபோதனர்-முனிவர். கருணீகர்-கணக்கர். விரகு-தந்திரம். விழை மருத்துவர்கள்-விரும்புகின்ற வைத்தியர்கள். உரம்-வன்மை. கவிவாணர்-புலவர்கள். வரநதி-கங்கை. சரவணம்-சரம்-நாணற்புல், வநம்-காடு; வநம் வணம் என்றாயிற்று; இங்கே சரவணப் பொய்கை. தருணம்-இளமை, புதுமை. மிசை-மேல்.

(106) கேதகி-கொடு. தும்பி-யானை. கிறை-கற்பு.

III. இனிய பகுதிகள்

கம்பர் நஞ்சை மாற்றியது

(1) ஆழியான்-சக்கரப்படையை உடைய திருமால். பள்ளி அணை-படுக்கை. வாழி, அசை. மணித்தாம்பு-அழகிய கயிறு. ஊழியான்-சிவபெருமான் பூண்-ஆபரணம் புரம், முப்புரம். பொற்சிலை-பொன் மலையாகிய மேருவினாலாகிய வில். நாண்-கயிறு.

(2) ஆரம்-முத்துமாலை. திங்கள்-சநதிரன். பண்பு-தன்மை.

ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்

(3) பார்-பூமி. பங்கயம்-தாமரை. ஈரம்-குளிர்ச்சி.

(4) கோரம்-சோழன் குதிரை. கனவட்டம் - பாண்டியன் குதிரை. ஆர்-ஆத்தி; சோழன் அடையாளப்பூ. வேம்பு, பாண்டியன் அடையாளப்பூ. ஆதித்தன்-சூரியன். அம்புலி-சந்திரன். மீனவன்-மீன்கொடியை உடைய பாண்டியன். உறந்தை-உறையூர்; சோழன் தலைநகர். கொற்கை-பாண்டியன் தலைநகர். அம்மானை, பெண்கள் காய் எறிந்து விளையாடும் விளையாட்டு.

(5) கடிப்பகை-பேய்ப்பகை. தாதகி-ஆத்தி. கண்ணி-மாலை. பரவை-கடல். பகர்தல்-சொல்லுதல்.

பட்டினத்தார்

(6) ஐயிரண்டு-பத்து. திங்கள்-மாதம் பையல்-மகன்.

(7) வட்டில்-தட்டு. (8) தொந்தி-வயிறு. முட்டம்-ஊர். சிறகு-தெரு.

கூத்தர்

(10) மோனை, பாட்டில் ஓரடியிலே முதலெழுத்துக்கள்ஒத்து வருவது. வனைதல்-செய்தல். அங்குசப்பையல்-அழகிய குசப்பையல் என்றும், யானை யென்று கூத்தர் கூறியதனால் அதை அடக்கும் அங்குசம் போன்ற பையல் யான் என்றும் இரண்டு பொருள்படச் சொன்னான்.

காளமேகப் புலவர்

(11) புவிராயர்-அரசர் கவிராயர்-புலவர்; இங்கே கவிராயர் என்பதற்குக் காளமேகப் புலவர் குரங்கரசர் எனப்பொருள் கொண்டு இகழ்ந்தார் கபி-குரங்கு; அது தமிழில் கவி எனத் திரியும்.

(12) வெள்ளைக்கவி-வெண்பா; பொருள் அற்ற பாட்டு.

(13) காளமேகம்-கறுத்த மேகம்; இருண்ட மேகம் நீரைப்பொழிவது போலக் கவியைப் பொழிவேன் என்றார். பிளாய்-பிள்ளாய்.

IV. தனிப்பாடல்கள்

பச்சையப்பன் அறம்

(1) நேயம்-அன்பு. தேக்கியசீர்-மிக்க சிறப்பு. (2) பரியும்-விரைந்துசெல்லும். இரவி-சூரியன். ஈட்டுநிதி-தேடிய செல்வம்.

(3) வடுகு-தெலுங்கு. துன்னியது-சேர்ந்தது. சற்குணமேரு-நல்ல குணத்தால் மேருமலையைப் போலச் சிறந்தவர்.

(4) பூபன்-அரசன். (5) இலங்க-விளங்க. சங்கநிதி-குபேரனிடத்திலிருக்கும் சங்கு வடிவாக உள்ள செல்வம்.

(6) அவ்வியம்-பொறாமை. பதுமநிதி-கேட்டதைக் கொடுக்கும் குபேர செல்வம். (7) ஆன்ற-நிறைந்த. கனகம்-பொன்.

(8) பொய்யாவிளக்கம் - அணையாத விளக்கு. தீர்த்தமுதல் மூன்று-தீர்த்தம், ஸ்தலம், மூர்த்தி. பார்த்தன்-அரசன்.

பெற்றோரை வணங்கல்

(15) தரணி-பூமி. (16) சோமன்-துணி.

பலபொருள் பற்றியவை

(18) வையகம்-பூமி.

(19) பணி-ஆபரணம். பட்டாங்கு-உண்மை. வட்டாடுதல்-ஒரு வகைச் சூதாட்டம். (20) வன்கணாளர்கள்-கொடியவர்.

(21) மேதினி-பூமி. நுவல் பாற்கடல்-புகழ்கின்ற திருப்பாற் கடல் மாலானவர்-திருமால்; மயக்கங்கொண்டவர் என்றும்இடத்துக் கிசையக் குறிப்புக் கொள்க. ஆலாலம்-விஷம். அரன்-சிவபெருமான். தோலாடை-புலித்தோலாடை. (22) சனகதண்டி-பொற் பல்லக்கு.

(23) அரம்பை-வாழை. முக்கனி-வாழை, மா, பலா. வெண் ணெய்-திருவெண்ணெய் நல்லூர்.

(24) பூழியர் கோன்-பாண்டிய மன்னன். சான்றோர்-பெரி யோர்.

(25) வழுதுணங்காய்-கத்தரிக்காய். வாட்டு-வதக்கிய கறி.

(26) மட்டு-தேன். வரைந்த ஏடு-எழுதப்பட்ட ஓலை. நளினம்-சுவை.

(27) நளினம்-தாமரை. கபாடம்-கதவு. குலாதிபன்-குலத்துக் குத் தலைவன்.

(28) பட்டி-தொழு. கொங்கு-கோயமுத்தூர், சேலம் ஜில்லாக் கள். கார்-மேகம். (29) வீறு-பெருமை.

(31) தெட்டுதல்-ஏமாற்றல். (32) காதம்-இரண்டேகால் கல்.

(33) நாகை-நாகபட்டினம். வெள்ளி-சுக்கிரன்.

சிவஞானமுனிவர்

(35) அருந்ததி-வசிட்டருக்கு மனைவி. ஆனந்தக் கூத்தர்-சிவ ஞான முனிவருக்குத் தந்தையார்; தாயார் மயிலம்மையார். தவாத-கெடாத.

V. பன்னோறி

தாலாட்டு

(1) ஆணிப்பொன்-கெட்டிப் பொன். வண்ணம்-அழகு, அல் லது நிறம். விடுதந்தான்-கொடுத்தனுப்பினன். மாணி-பிரமசாரி.

குறளன், வாமனவதாரத்தைக் குறித்தது. வையம் அளந்தான், திரிவிக்கிரமாவதாரம்.

(2) சேவடி-செம்மை + அடி. சரிவளை-சரியும் வளையும்; முன்கை வளையும் தோள்வளையும். அமரர்கள்-தேவர்கள். போத்தந்தார்-கொடுத்தனுப்பினர். முகில்-மேகம்.

(3) ஐம்படை, திருமாலுடைய ஐந்து ஆயுதங்களின் வடிவங்களையும் அமைத்துச் செய்யும் ஒருவகை ஆபரணம்; அதனைக் குழந்தைகட்கு அணிவது இயல்பு. உவன்-பக்கத்தே நின்றவன்.

(5) கண்ணி-மாலை. வாசிகை-நெற்றி மாலை. குடந்தை-கும்பகோணம்.

(6) கோலம்-அழகு. நெட்டிலை - நெடுமை + இலை. கோழிக்கொடி, முருகனுக்கு உரியது. (8) சமரபுரி-திருப்போரூர்.

(9) சீரலைவாய்-திருச்சீரலைவாய். திருப்பரங்குன்றம்-மதுரையை அடுத்துள்ள ஒரு தலம். ஏரகம்-திருவேரகம், சுவாமிமலை என்னும் ஊர்.

(11) பார்த்திபன்-அரசன்.

(12) வயிறு வாய்த்தவன்-பெற்றவன். கன்னி-அழியாத. கணபுரம்-திருக்கண்ணபுரம். இராகவன்-இரகு வமிசத்தில் பிறந்தவன், தத்திதாந்த நாமம்.

(13) வரை-மலை. தார்-மாலை. தாசரதி-தசரத குமாரன்; தத்திதாந்த நாமம்.

(14) அற்றவர்-உலக ஆசையைவிட்டவர். சிற்றவை-சிறிய தாய். கல்வி

(15) மூங்கை-ஊமை. வானவர் நாடு-தேவலோகம்.

VI. காதை

பஞ்சதந்திர வரலாறு

(1) அன்னோ-ஐயோ.

(3) மாயிரு ஞாலம்-மிகப் பெரிய பூமி. சுதன்-மைந்தன்.

(4) இராசதம்-கோபம் முதலிய ரஜோகுணங்கள். இகம்-இவ்வுலகம். பரம்-மறுவுலகம்.

(5) துங்கம்-உயர்ச்சி. தகைமையர்-தன்மை யுடையவர்.

(6) விஞ்சுதல்-மிகுதல். மாற்றம்-சொல். பஞ்சதந்திரம்-ஐந்து தந்திரம்.

(10) கெழுமிய-பொருந்திய. அர்த்தம்-பொருள்.

(13) அடவி-காடு. ஆணை-கட்டளை.

(16) வெய்ய-கொடிய. வெருவி-அஞ்சி. பருமுழை-பெரிய குகை. துய்ய-பரிசுத்தமான. இறைஞ்சி-வணங்கி.

(17) பங்கம்-சேறு. புனல்-நீர். தூரவு-கிணறு.

(18) இன்னல்-துன்பம். (21) பூவை-மைனா. கூபம்-கிணறு.

(23) பொருவு-ஒப்பு. பக்கல்-பக்கம். (25) மூப்பு-கிழப்பருவம்.

(26) பட்சபாதம்-ஓரம். (28) இயற்றினம்-செய்தோம்.

(29) துலங்கு-விளங்குகின்ற. மார்ச்சாலன்-பூனை. கண்டம்-கழுத்து.

கோநாயும் ஆடும்

(34) தோம்-குற்றம். எமுற-இன்ப மடைய. பருகல்-குடித்தல். நாமுற-அச்சங் கொண்டு.

(35) கீழ்பால்-கீழ்ப்பக்கம். நேரிய-அழகிய.

(36) அகந்தை-அகங்காரம்.

(37) மிச்சில்-எச்சில். நுகர்ந்தேன்-உட்கொண்டேன்.

(38) புல்லிய கரங்கள்-சிறிய கைகள். (39) பைய-மெதுவாக.

(41) கழறுவேன்-சொல்லுவேன். (42) சாற்றுதல்-சொல்லுதல்.

VII. தமிழ் நாடு

(1) பொருனை-தாம்பிரபரணி. (2) தமிழ்வேதம்-தேவார திருவாசகங்கள்.

(3) வள்ளல்-தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் கொடுப்பவர். (4) மிளிரும்-விளங்கும்.

(7) நானிலம்-பூமி; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களையுடையது; குறிஞ்சி-மலையும் அதைச் சார்ந்த இடமும்; முல்லை-காடும் அதைச்சார்ந்த இடமும்; மருதம்-வயலும் அதைச்சார்ந்த இடமும்; நெய்தல்-கடலும் அதைச்சார்ந்த இடமும்.

(9) மன்றம்-சபை. (11) காராளர்-வேளாளர்.

(12) நாயன்மார்-தலைவர். ஆழ்வார்-ஆள்பவர், ஆழ்பவர்.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.